மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இது போன்ற வன்முறை வெறியாட்டங்களில் வன்முறையாளர்கள் ஈடுபடுகின்ற பொழுது போலீசார் அவ்வப்பொழுது நடவடிக்கைகள் மேற்கொள்ளுகின்றார்கள். ஆனால், சில நேரங்களில், சில இடங்களில், திடீரென்று, மின்னல் வேகத்திலே, இம்மாதிரி நடைபெறுவதால், போலீசாரால் அவைகளைத் தடுக்க முடியவில்லை. எதிர்பாராது நடைபெறும்போது கண்காணிப்பைச் செய்வதற்கு இயலாத நிலையிலேதான் போலீசார் இருக்கிறார்கள். ஆனால், நிகழ்ச்சிகள் நடைபெற்ற சில இடங்களிலே, மீண்டும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்கள்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அந்த இடங்களிலே, தண்டிக்கப்பட்டும் இருக்கிறார்கள். சாதாரணமாக, போலீசார் இங்கே இன்னது நடைபெறும் என்று நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால் இன்னின்ன இங்கிங்கு நடைபெறும் என்று முன்கூட்டியே போலீசார் அறிந்துகொள்வது எல்லா நேரங்களிலும் இயலாது என்பதை நாம் மறந்திட முடியாது.

ஊர்வலம் நடந்து, அது கலைந்து சென்ற பிறகு, வன்முறையாளர்கள் சிலபேர் திட்டமிட்டு இந்தக் காரியத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். பெரிய கலவரங்கள் செய்தல், திருட்டு, கொள்ளை என்கின்ற அளவுக்கு திருச்சி நகரத்திலே இந்தக் காரியம் நடைபெற்றிருக்கிறது. போலீசார் புலன் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். குற்றவாளிகள் மீது வழக்குகள் தொடரப்படும் என்று மாமன்றத்திற்கு உறுதி அளிக்கின்றேன்.

(ஆ) சென்னை நகரில் ஏற்பட்ட மர்ம வெடிவிபத்தும் அதன் விளைவுகளும் குறித்து.

THIRU M. A. LATHEEF: Sir, I wish to call the attention of the Hon. Chief Minister to a matter of urgent public importance, namely, the mysterious explosion of a bomb of a mysterious type in Madras City and the consequent death of a lady and the serious injuries to many.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ராயபுரம், பழைய ஆட்டுத் தொட்டிச்சாலை (ஸ்லாட்டர் ஹவுஸ்

TRUTH ALONE TRIUMPHS

சாலை, எண் 26 ஆஞ்சநேயர் நகர், 6-வது சந்தில் 12—12—1972-ல் மாலை சுமார் 4-30 மணிக்கு வெடி விபத்து ஒன்று ஏற்பட்டது. இதன் விளைவாக மாதம்மாள் (வயது 10) ராணி (வயது 2) என்ற இரு பெண்கள் இறந்தனர். ஏனைய 6 பேர் காயமடைந்தனர். அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனையில் 3 பெண்களும், ஓர் ஆணும் அகநிலை நோயாளிகளாகச் சேர்க்கப்பட்டனர். எஞ்சிய இரு ஆண்கள் புறநிலை நோயாளிகளாகச் சிகிச்சை அளிக்கப்பட்டனர். அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட மூன்று பெண்டிருள் முனியம்மாள் (வயது 50) என்பவர் 13—12—1972 இரவு 12-15 மணிக்குக் காலமானார். மற்ற இருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

தகவல் கிடைத்ததும், இ.பி.கோ. 304(எ), 286, 338-வது பிரிவுகளின் கீழும் இந்திய வெடிமருந்துகள் சட்டத்தின் 5-வது பிரிவின் கீழும் 12—12—1972-ல் காவலர்கள் வழக்கு ஒன்று பதிவு செய்தனர். தெற்குவட்டம் வெடிமருந்துகள் முதுநிலை ஆய்வாளர் மற்றும் தமிழ் நாடு குற்றவியல் மருத்துவ ஆய்வுக்கூட வல்லுநர்களின் ஒத்துழைப்புடன் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டது.

மாநகராட்சித் துப்புரவுப் பணியாளராகிய திரு. பாகா ராமசாமி குடியிருக்கும் ராயபுரம், பழைய ஆட்டுத் தொட்டிசாலை (ஸ்லாட்டர் ஹவுஸ் சாலை, ஆஞ்சநேயர் நகர், 6-வது சந்து-, 26-ம் எண் வீட்டு முகப்பில் இவ் வெடி விபத்து நடைபெற்றது. எனினும், அந் நிகழ்ச்சி நடந்தபோது அவர் இல்லை. பாறை உடைப்பதற்கென பயன்படுத்தப்படும் வெடிகள் அந்த இடத்தில் இருந்ததாகவும் அவற்றிலிருந்து வெடி விபத்து ஏற்பட்டதாகவும் தொடக்கப் புலனாய்விலிருந்து தெரிய வருகிறது. இந்த வெடிகள் எந்த இடத்திலிருந்து அங்கு வந்தன என்பது குறித்துப் புலனாய்வு நடந்து வருகிறது. மர்மமான வெடி குண்டு எதனாலும் இந்த வெடி விபத்து ஏற்படவில்லை.

சட்டம், ஒழுங்கு (வடக்கு) காவல்துறை டெபுடி கமிஷனர் 13—12—1972-ல் நிகழ்ச்சி நடந்த இடத்தைப் பார்வையிட்டார். மேற்கொண்டு புலனாய்வு செய்வதற்கு அவர் உதவி புரிந்து வருகிறார் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. எம். ஏ. லத்திப்</u>: அந்த வெடிகுண்டு ஏதோ ஒரு பந்தைப் போல் இருந்ததாகவும் அதைக் குழந்தைகள் எடுத்து விளையாடிக் கொண்டு ஒருவருக்கொருவர் வீசிக் கொண்டிருந்ததாகவும் அந்தக் குண்டு கீழே விழுந்தவுடன் வெடித்ததாகவும் தெரிகிறது. கற்களை

உடைப்பதற்காக உள்ள வெடிகுண்டாக இருந்தாலும் அஜாக்கிரதையாக குழந்தைகள் கைக்கு எப்படி வந்தது? வெடிமருந்து பந்து உருவத்தில் இருக்குமா என்பதைப்பற்றியெல்லாம் விபரங்கள் தற்போது சொல்ல இயலாவிட்டாலும் விபத்து ஏற்பட்டதற்குக் காரணமாக இருந்தவர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான், அது புலனாய்விலே இருப்பதாகச் சொல்லியிருக்கிறேன், மேற்கொண்டு விவரங்களைச் சொல்வதற்கு இயலாது.

(5) அமைச்சர் அறிக்கை—கண்ணங்குடி பஞ்சாயத்து ஒன்றிய ஆணையர் மீது சாட்டப்பட்ட லஞ்சப் புகார் குறித்து

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு நான் இந்தப் பேரவைக்கு ஒரு அறிக்கையை அளிக்க விரும்புகிறேன். நேற்றைய தினம் கண்ணங்குடி பி.டி.ஓ. அவர்கள்மீது லஞ்சப் புகார் தெரிவித்து வந்த ஒரு தந்தியை டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் சுட்டிக் காட்டினார்கள். அதைப்பற்றிய விளக்கத்தைத் தெரிவிக்கிறேன்.

தேவகோட்டை டிவிஷனில் உள்ள கண்ணங்குடி பஞ்சாயத்து ஒன்றிய ஆணையர் (பி.டி.ஓ.) ஐ.எம்.எஸ். கடனை சாங்ஷன் செய்து பின் அதற்குரிய பெர்மிட்டைத் தருவதற்கு ரூ. 100க்கு 2 ரூபாய் லஞ்சம் கேட்டதாக நடகுடி வி. சுப்பையா அம்பலம் தந்தி கொடுத்திருப்பதாக நேற்று இங்கே தெரிவித்தார்கள். உடனடியாக தேவகோட்டை ஆர்.டி.ஓ. அவர்களை இதுபற்றி விசாரிக்குமாறு கேட்கப் பட்டது. நேற்று ஆர்.டி.ஓ. விசாரணை செய்ததில் இந்தப் புகார் ஆதாரமற்றது என்று கூறியுள்ளார். திரு. சுப்பையா அம்பலம் ரூ. 300க்கு ஐ.எம்.எஸ். கடன் கேட்டு விண்ணப்பம் செய்த தேதி 17—11—1972. கடன் சாங்ஷன் செய்த தேதி 25—11—1972. பெரிமிட் சுப்பையா அம்பலம் பெற்றுக்கொண்ட தேதி